# விழிப்புணர்வு ஏற்படுத்திய தினசரி சந்தை நிலவரம்

எஸ்.கொளஞ்சி

S/o செல்லமுத்து
சிறுவங்கூர்
கட்டுக்கோட்டை
கல்லக்குருச்சி
செல்:09790281760



வணக்கத்திற்குரியவர்களுக்கு

என்னுடைய பெயர் கொளஞ்சி நான் சிறுவங்கூர் எனும் கிராமத்தில் விவசாயத்தினை மேற்கொண்டு வருகிறேன். எங்களுக்கு சொந்தமாக உள்ள இரண்டு ஏக்கரில் சிறிதளவு பகுதியில் வாழை தோட்டத்தினை வைத்துள்ளோம். இதிலிருந்து எனக்கு கனிசமான அளவு வருமானம் இருந்து வந்தது. ஆனால் இதில் என்னால் நல்ல முன்னேற்றததினை காண முடியவில்லை. பயிரிடுவதற்கும் அதனை பராமரிப்பதற்குமே அதில் வருகின்ற வருமானம் சரியாகி விடுகின்றது. இந்த தருணத்தில் தான் நான் தங்களது விவசாய பல்கலைக்கழகத்தின் சந்தை நிலவரம் பற்றிய தகவலை அறிந்தேன்.

உங்களது இந்த டி.எம்.ஐ. யின் தினசரி சந்தை நிலவரம் பற்றி அறிந்து கொண்டேன். இதனை பற்றி முழு விவரங்களை விவசாய பல்கலைக்கழகத்தின் திட்ட அலுவலர் மூலம் முழுமையாக தெரிந்து கொண்டேன். இந்த அலைபேசி சேவை எங்களை போன்ற சிறிய விவசாயிகளுக்கு உறுதிணையாக இருக்கிறது. இதற்கு முன் நான் தினசரி சந்தை நிலவரத்தினை நண்பர்கள் மூலமாகவும் நாளிதழ்கள் மூலமாகவும் தொலைக்காட்சியின் மூலமாகவும் மட்டுமே தெரிந்து கொண்டேன். ஆனால் இப்பொழுதோ எங்களின் அலைபேசியின் வழியாகவே தெரிந்து கொள்ள இயலுகிறது.

இதுபோன்ற அலை சேவை வேளாண் விலை பொருட்களின் குறிப்பாக காய்கறிகள் மற்றும் பழ வகைகளின் விலையினை தெரிந்து கொள்ள உதவுகிறது. உங்களின் இந்த சேவையின் மூலம் தான் 152 வகையான காய்கறி மற்றும் பழங்கள் மற்றும் பூ வகைகள் இருப்பதையே அறிந்து கொண்டேன். இந்த சேவை கிடைத்த பிறகு எனது பொருளை சிறிதளவு விலை உயர்த்தி விற்க முயன்றது. இதன் மூலமாக நான் தற்பொழுது கனிசமான லாபத்தினையும் பெற்றுள்ளேன். இதற்காக நான் தங்களது இந்த DMI மற்றும் விவசாய பல்கலைக்கழகத்தின் இயக்குனர் மற்றும் ஆய்வாளர் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உங்களது இந்த சேவை மென்மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.